முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2022 சனவரி

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2022-03-19
காலை
[08.45 – 12.00]

பக்கங்கள் : 12
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி, தொடர்புடைமையும் விசுவாசமான பிரதிநிதித்துவத்தையும் கொண்ட தகவலின் பயனை மேம்படுத்துகின்ற தர ரீதியான பண்புகள் காணப்படுகின்றன. மேலும், வேலைச்சட்டகமானது நிதிக் கூற்றுகளின் மூலகங்களின் (elements) அளவீட்டையும் அமைத்துள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நிதித் தகவல்களின் பயனை மேம்படுத்துகின்ற இரண்டு (02) தர ரீதியான பண்புகளை (qualitative characteristics) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) நிதிக் கூற்றுகளின் மூலகங்களை அளவீடு செய்யப் பயன்படுத்தப்படும் இரண்டு (02) வெவ்வேறு அளவீட்டு அடிப்படைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

ஒருங்கிணைந்த அறிக்கையிடலைப் பின்பற்றுவதானது நிறுவன அறிக்கையிடலிலும் நிதி மற்றும் நிலைபேறான அறிக்கையிடலிலும் சிறந்து விளங்குவதற்கு வழியமைக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) "நிலைபேறான அறிக்கையிடல் (Sustainability Reporting)" என்னும் பதத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் வணிக மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ள இரண்டு (02) பிரதான பகுதிகளைக் (areas) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

ஒரு நிதிச் செயலாற்றுகைப் பகுப்பாய்வானது நிதிக் கூற்றுகளின் பகுப்பாய்வு மற்றும் பொருள் விளக்கத்தை உள்ளடக்குகிறது. அந்த வகையில், அது வணிகத்தின் இலாபத்தன்மை மற்றும் நிதி உறுதிப்பாட்டின் முழுமையான அறுதியீடு ஒன்றை மேற்கொள்கிறது. நிதி விகிதப் பகுப்பாய்வு என்பது வணிகமொன்றின் நிதிச் செயலாற்றுகையை இனங்காண்பதற்கான ஒரு வழியாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நிறுவனமொன்றுக்கு நிதி விகிதங்களின் பகுப்பாய்வு ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (3) காரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) விகிதப் பகுப்பாய்வின் இரண்டு (2) வரையறைகளைக் (limitations) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

கீழ்வரும் தகவல்கள் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட கணேஷ் கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) கம்பனியானது 2021 மார்ச் இல் ஒரு புதிய பொருளை அபிவிருத்தி செய்வதற்கான சந்தை ஆய்வை நடத்தியிருந்தது. இந்தச் சந்தை ஆய்வை நடத்துவதற்காக ஆய்வுக் கம்பனிக்கு ரூபா 1,500,000/- செலுத்தப்பட்டது.

(2) கம்பனி, புதிய பொருளுக்கான காப்புரிமையை (patent right) பதிவு செய்துள்ளது. காப்புரிமையை பதிவு செய்தமைக்கான செலவு ரூபா 200,000/-.

(3) கடந்த சில ஆண்டுகளாக, அதன் தற்போதுள்ள பிரதான வாடிக்கையாளர்களுடன் கம்பனி சிறந்த உறவினைப் பேணுகிறது. கம்பனியானது ஆண்டின் காலப்பகுதியில், புதிய பொருளின் விற்பனையை அதிகரிப்பதற்காக ரூபா 2 மில்லியனைச் செலவு செய்து வாடிக்கையாளர்களுக்கான களியாட்ட நிகழ்வுகளை நடத்தியிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 38 – அருவச் சொத்துகள் நியமத்தின்படி, மேற்படி ஒவ்வொரு கிரயமும் அருவச் சொத்தொன்றாக ஏற்பிசைவு செய்யப்பட முடியுமா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட ஆரியா (தனியார்) கம்பனி**யின் 2021 மார்ச் 31 மற்றும் 2020 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதி நிலைக் கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட ஆரியா (தனியார்) கம்பனி**

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| மார்ச் 31 இல் | 2021 | 2020 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 10,500 | 8,200 |
| திரண்ட தேய்மானம் | (5,600) | (4,800) |
| **முன்கொணரற் பெறுமதி** | **4,900** | **3,400** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 6,080 | 5,580 |
| வியாபார வருமதிகள் | 1,920 | 2,330 |
| காசும் காசுச் சமானங்களும் | 1,200 | 990 |
| | **9,200** | **8,900** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **14,100** | **12,300** |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 5,000 | 5,000 |
| கைக்கொள் இலாபம் | 3,050 | 2,187 |
| | **8,050** | **7,187** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 3,300 | 2,700 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடை ஏற்பாடு) | 1,600 | 1,200 |
| | **4,900** | **3,900** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| குறுங் காலக் கடன்கள் | 150 | 50 |
| வியாபார சென்மதிகள் | 750 | 330 |
| செலுத்த வேண்டிய கடன்களுக்கான வட்டி | 100 | 70 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 150 | 763 |
| | **1,150** | **1,213** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **14,100** | **12,300** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினமாக ரூபா 105,000/- மதிப்பிடப்பட்டுள்ளது.

(2) இயந்திரமொன்று 2020 ஏப்ரல் 01 இல் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அந்த இயந்திரத்தின் 2020 ஏப்ரல் 01 இலான கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் ஆகியன முறையே ரூபா 5.1 மில்லியன் மற்றும் 2.5 மில்லியன் என்பனவாகும். இந்த இயந்திரத்தின் விற்பனை மூலம் ரூபா 750,000/- இழப்பு ஏற்பட்டுள்ளது. விற்பனை செய்யப்பட்ட இயந்திரத்திற்கு மாற்றீடாக ஆண்டின் காலப்பகுதியில் ஒரு புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. இது தவிர, ஆண்டின் காலப்பகுதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான வேறு எந்த கொள்வனவுகளோ அல்லது விற்பனைகளோ மேற்கொள்ளப்படவில்லை.

(3) ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட பணிக்கொடை ரூபா 360,000/-.

(4) கடன்கள் மீதான ஆண்டிற்கான வட்டி ரூபா 450,000/- என்பதுடன் ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 2,000,000/- கடனொன்று பெறப்பட்டுள்ளது.

(5) ஆண்டின் காலப்பகுதியில் பங்குதாரர்களுக்கு பங்கிலாபங்கள் எதுவும் செலுத்தப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நேரில் முறையைப் பயன்படுத்தி 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ஆரியா (தனியார்) கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

(A) கீழ்வரும் தகவல்கள் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ரவி கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிவிதிக்கத்தக்க இலாபம் ரூபா 600,000/-

(2) 2020 ஏப்ரல் 01 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் ரூபா 125,000/-.

(3) நடைமுறையல்லாச் சொத்துகளின் முன்கொணரற் பெறுமதியும் வரி அடிப்படையும் கீழ்வருமாறு :

| உருப்படி | 2021 மார்ச் 31 இலான முன்கொணரற் பெறுமதி (கணக்கீட்டில் எழுதப்பட்ட பெறுமதி) (ரூபா) | வரி அடிப்படை (ரூபா) |
|---|---|---|
| கட்டடம் | 10,000,000 | 12,000,000 |
| இயந்திரம் | 6,000,000 | 5,000,000 |

(4) நிறுவன வருமான வரி வீதம் 14 %.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) 2021 மார்ச் 31 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்து / பரிப்பு (03 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிச் செலவினங்கள் (02 புள்ளிகள்)

(B) கீழ்வரும் தகவல்கள் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட X கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) வருமான வரி செலுத்தாததன் காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் (IRD) வரிமதிப்பாண்டு 2018/19 இற்கான வரி மதிப்பீட்டு அறிவித்தலொன்று அனுப்பப் பட்டுள்ளதுடன் வரி செலுத்தாததன் மீது தண்டம் (penalty) ஒன்றும் விதிக்கப்பட்டுள்ளது. வரி மதிப்பீட்டின்படி, ரூபா 2.7 மில்லியன் தொகையொன்று IRD இனால் விதிக்கப்பட்டுள்ளது. செலுத்தப்படாத வருமான வரித் தொகை ரூபா 1.3 மில்லியனாக இருந்ததுடன் தண்டமாக இருக்கின்ற மீதித் தொகையை தள்ளுபடி செய்ய முடியும் என முகாமை நம்புகிறது.

(2) ஒரு மோசடிக் குற்றச்சாட்டு காரணமாக 2018 ஆம் ஆண்டில் கம்பனியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் ஊழியர் ஒருவர் அவரது பணிநீக்கம் தொடர்பில் ரூபா 2 மில்லியன் நட்டஈடு கோரி கம்பனிக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். வலிதான ஆதாரங்கள் இருப்பதன் காரணமாக, கம்பனி நட்டஈட்டைச் செலுத்துவதற்கான வாய்ப்பு குறைவாகவே இருக்கிறது என கம்பனியின் வழக்கறிஞர் நம்புகிறார்.

நிதிக் கூற்றுகள் வழங்கப்படுவதற்காக அதிகாரமளிக்கப்படும் திகதியில் மேற்படி விடயங்கள் தொடர்பிலான முடிவுகள் இறுதி செய்யப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பரிப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள் என்ற நியமத்தின் படி, 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளில் மேற்படி ஒவ்வொரு விவரணத்தையும் எவ்வாறு ஏற்பிசைவு செய்ய முடியுமென **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) கீழ்வரும் மீதிகள் **வரையறுக்கப்பட்ட சொனி கம்பனியின்** கட்டடம் தொடர்பில் 2020 ஏப்ரல் 01 ஆந் திகதியிலான நிதி நிலைக் கூற்றில் காணப்பட்டன: *(ரூபா)*

| சொத்து | கிரயம் | 2020 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் | 2020 ஏப்ரல் 01 இல் முன்கொணரற் பெறுமதி |
|---|---|---|---|
| கட்டடம் | 24,000,000 | 7,200,000 | 16,800,000 |

கட்டடத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலம் 40 ஆண்டுகளாக இருப்பதுடன் கட்டடங்கள் கம்பனியினால் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுகின்றன.

2020 ஏப்ரல் 01 இல், கட்டடத்தின் பயன்தரும் ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டதுடன், கட்டடத்தின் மீதமுள்ள பயன்தரும் ஆயுட்காலம் 2020 ஏப்ரல் 01 இல் மேலும் 32 ஆண்டுகளால் அதிகரிக்கப்பட்டுள்ளமையை அது வெளிப்படுத்தியது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் 31 இல் கட்டடத்தின் திரண்ட தேய்மானத்தையும் முன்கொணரற் பெறுமதியையும் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) 2020 ஏப்ரல் 01 இல், **வரையறுக்கப்பட்ட சிக்மா கம்பனி** (குத்தகைக்குப் பெறுபவர்) **ABC நிதிக் கம்பனியுடன்** (குத்தகைக்குக் கொடுப்பவர்) இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கான குத்தகை உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டது. குத்தகை உடன்படிக்கை தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| இயந்திரத்தின் சீர்மதிப்பு | ரூபா 3,000,000/- |
| குத்தகையின் ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட முற்பணத் தொகை | ரூபா 1,000,000/- |
| குத்தகைக் காலம் | 3 ஆண்டுகள் |
| வருடாந்த குத்தகைத் தவணைக்கட்டணம் | ரூபா 832,635/-<br>(ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 இல் செலுத்தப்பட வேண்டும்) |
| உள்ளார்ந்த வட்டி வீதம் | வருடாந்தம் 12 % |

குத்தகையின் முதலாவது தவணைக் கட்டணம் 2021 மார்ச் 31 இல் செலுத்தப்பட்டதுடன் குத்தகை உடன்படிக்கையின்படி, இயந்திரத்தின் உரிமை குத்தகைக் கால முடிவில் **வரையறுக்கப்பட்ட சிக்மா கம்பனிக்கு** மாற்றப்படுகிறது. **வரையறுக்கப்பட்ட சிக்மா கம்பனி**யானது குத்தகைக் காலம் ஈறாக நேர்கோட்டு அடிப்படையில் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமையைத் தேய்மானம் செய்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

குத்தகைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் **வரையறுக்கப்பட்ட சிக்மா கம்பனியின்** 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று, 2021 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று ஆகியவற்றின் பிரித்தெடுப்புகளைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழ்வரும் பரீட்சை மீதி 2021 மார்ச் 31 இலான **ரிஷி PLC** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது:

**ரிஷி PLC**

**2021 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (10,000,000 சாதாரண பங்குகள்) | | 100,000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 3,000 |
| கைக்கொள் இலாபம் – 2020 ஏப்ரல் 01 இல் | | 22,000 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் / மீள்மதிப்பீட்டுத் தொகையில் :** | | |
| காணியும் கட்டடமும் (காணி – மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் - ரூபா 44 மில்லியன்) | 62,000 | |
| இயந்திரம் | 14,000 | |
| கணினி மென்பொருள் | 3,000 | |
| **திரண்ட தேய்மானம் - 2020 ஏப்ரல் 01 இல் :** | | |
| கட்டடம் | | 12,000 |
| இயந்திரம் | | 6,000 |
| கணினி மென்பொருள் | | 1,200 |
| மூலதன புத்துருவாகும் வேலைகள் | 18,000 | |
| தொக்கு – 2021 மார்ச் 31 இல் | 28,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 21,700 | 15,600 |
| ஐயுறவுக்கடன் ஏற்பாடு – 2020 ஏப்ரல் 01 இல் | | 3,000 |
| முற்கொடுப்பனவுகள் | 12,000 | |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 25,100 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 81,000 | 150,000 |
| ஏனைய வருமானம் | | 2,100 |
| செலுத்த வேண்டிய வருமான வரி – 2020 ஏப்ரல் 01 இல் | | 3,500 |
| செலுத்திய வருமான வரி | 7,200 | |
| நிருவாகச் செலவினங்கள் | 34,200 | |
| விநியோகச் செலவினங்கள் | 21,000 | |
| நிதிச் செலவினங்கள் | 6,200 | |
| வங்கிக் கடன் | | 15,000 |
| | **333,400** | **333,400** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின் காலப்பகுதியில், மோசமான தரத்தைக் கொண்ட பொருள்களை விற்பனை செய்தமைக்காக வாடிக்கையாளர் ஒருவர் ரூபா 1 மில்லியன் நட்டஈடு கோரி கம்பனிக்கு எதிராக நீதிமன்ற வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். 2021 மே 20 ஆந் திகதி, நட்டஈடாக வாடிக்கையாளருக்கு ரூபா 750,000/- இனைச் செலுத்துமாறு நீதிமன்றத்தினால் கம்பனிக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கணக்கேடுகளில் எவ்வித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

(2) நிதியாண்டு 2020/2021 இற்கான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 600,000/- ஆனது கணக்கிற் கொள்ளப்படவில்லை. முற்கொடுப்பனவுக் கணக்கானது நாட்காட்டி வருடம் 2021 இன் முழுமைக்கு மாகச் செலுத்தப்பட்ட வாடகைக் கொடுப்பனவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(3) 2020 ஏப்ரல் 30 இல், தொழிற்சாலைக் கட்டடமொன்றை நிருமாணிப்பதற்காக 10% என்ற வருடாந்த வட்டி வீதத்தில் ரூபா 15 மில்லியன் வங்கிக் கடனொன்றைக் கம்பனி பெற்றுக்கொண்டது. கட்டடத்தின் நிருமாணப் பணிகள் 2020 மே 01 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2021 மார்ச் 31 இல் நடைபெற்றுக்கொண்டிருந்தன. நிருமாணத்தின் மீது ஆண்டின் காலப்பகுதியில் செலவு செய்யப்பட்ட கிரயமானது மூலதனப் புத்துருவாகும் வேலைக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன், ஆண்டிற்கான கடன் மீதான வட்டி நிதிச் செலவினக் கணக்கிற்கு தாக்கல் செய்யப்பட்டது. வங்கியானது மூலதன மீள்கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கு ஒரு வருட சலுகைக் காலத்தினை வழங்கியுள்ளதுடன் கடனிக் ¼ பகுதி அடுத்த ஆண்டில் செலுத்தப்பட வேண்டும்.

(4) கம்பனிக்கு ரூபா 500,000/- செலுத்த வேண்டியிருந்த வாடிக்கையாளர் ஒருவர் 2021 மார்ச் 31 இல் வங்குரோத்து நிலையை அடைந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது பற்றி கம்பனிக்கு அறிவித்தல் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அவர் செலுத்த வேண்டிய தொகை (dues) தொடர்பில் முன்னைய ஆண்டில் பூரண ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், 2021 மார்ச் 31 இல் மீதமுள்ள வியாபார வருமதிகள் மீதியில் 10% ஐயுறவுக் கடன் ஏற்பாட்டைச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(5) வரிமதிப்பாண்டு 2019/20 இற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 3,500,000/- ஆனது 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்டதுடன் செலுத்தப்பட்ட தொகையானது செலுத்தப்பட்ட வருமான வரிக் கணக்கிற்கு தாக்கல் செய்யப்பட்டது. வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 5,300,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(6) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். சொத்துகளின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 20 ஆண்டுகள் |
| இயந்திரம் | : | 04 ஆண்டுகள் |
| கணினி மென்பொருள் | : | 04 ஆண்டுகள் |

(7) கம்பனியானது 2021 மார்ச் 31 இல் இயந்திரத்திற்கான வலுக்குறைப்பு சோதனையொன்றை (impairment test) மேற்கொண்டதுடன் அதில் இயந்திரத்தின் விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்ட சீர்மதிப்பு ரூபா 3,000,000/- எனவும் இயந்திரத்தின் பயன்பாட்டுப் பெறுமதி ரூபா 3,400,000/- எனவும் வெளிப்பட்டது. இந்த வலுக்குறைப்பு பற்றி கணக்கேடுகளில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

(8) மீள்மதிப்பீட்டு ஒதுக்கமானது 2 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட காணி மீள்மதிப்பீடு மீதான மிகையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(9) கம்பனியின் பணிப்பாளர் சபை நிதிக் கூற்றுகளை வழங்குவதற்காக 2021 யூன் 30 ஆந் திகதி அங்கீகரித்திருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்புக்குப் பொருத்தமான வடிவில் **ரிஷி PLC** இற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (10 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(c) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (02 புள்ளிகள்)

(d) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

கீழ்வரும் தகவல்கள் 2021 மார்ச் 31 மற்றும் 2020 மார்ச் 31 இல் உள்ளபடியான / முடிவடைந்த ஆண்டிற்கான **பீஷ்மா PLC** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

*(ரூபா '000)*

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **2021** | **2020** |
|---|---|---|
| விற்பனைகள் | 372,400 | 320,300 |
| விற்பனைக் கிரயம் | 203,500 | 178,500 |
| வட்டிச் செலவினம் | 7,220 | 5,950 |
| வருமான வரி | 4,000 | 3,800 |
| ஆண்டிற்கான இலாபம் | 22,700 | 17,800 |
| **மார்ச் 31 இல்** | **2021** | **2020** |
| கைக்கொள் இலாபம் | 41,600 | 18,900 |
| நடைமுறைச் சொத்துகள் | 151,400 | 140,200 |
| நடைமுறைப் பரிப்புகள் | 47,400 | 33,100 |
| வியாபார சென்மதிகள் | 38,300 | 25,900 |
| தொக்கு | 95,400 | 88,400 |
| குறிப்பிடு மூலதனம் (5,500,000 சாதாரண பங்குகள்) | 55,000 | 55,000 |

சகல கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2021 மார்ச் 31 இலான / இல் முடிவடைந்த ஆண்டிற்கான மேற்படி தகவல்களின் அடிப்படையில் கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக** :

(i) மொத்த இலாப விகிதம்

(ii) விரைவுச் சொத்து விகிதம்

(iii) தொக்கு இருப்புக் காலம்

(iv) கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம்

(v) பங்கொன்றின் வருவாய் (Earnings Per Share) (05 புள்ளிகள்)

(b) கீழ்வரும் தொழில்துறைச் சராசரிகளும் 2020/21 ஆம் ஆண்டிற்காக கணிப்பிடப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| மொத்த இலாப விகிதம் | 52 % |
| விரைவுச் சொத்து விகிதம் | 1.25 : 1 |
| தொக்கு இருப்புக் காலம் | 35 நாள்கள் |
| கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் | 42 நாள்கள் |
| பங்கொன்றின் வருவாய் | ரூபா 7.50 |

2021 மார்ச் 31 இலான / இல் முடிவடைந்த ஆண்டிற்கான **பீஷ்மா PLC** இன் செயலாற்றுகையை தொழில்துறைச் சராசரிகளுடன் **பகுப்பாய்வு செய்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 10

கீழ்வரும் நிதி நிலைக் கூற்றுகள் 2021 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட ஹிரு கம்பனி** மற்றும் **வரையறுக்கப்பட்ட தரு கம்பனி** ஆகியவற்றின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

**நிதி நிலைக் கூற்றுகள்** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல்** | **வரையறுக்கப்பட்ட ஹிரு கம்பனி** | **வரையறுக்கப்பட்ட தரு கம்பனி** |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துகள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 60,000 | 55,000 |
| **வரையறுக்கப்பட்ட தரு கம்பனியில்** முதலீடு | 40,000 | - |
| **நடைமுறைச் சொத்துகள் :** | | |
| தொக்கு | 13,000 | 18,000 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 20,000 | 15,000 |
| காசும் காசுச் சமானங்களும் | 12,000 | 15,000 |
| | **45,000** | **48,000** |
| **மொத்தச் சொத்துகள்** | **145,000** | **103,000** |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் | 60,000 | 40,000 |
| கைக்கொள் இலாபம் | 14,500 | 17,200 |
| | **74,500** | **57,200** |
| **நடைமுறையல்லாப் பரிப்புகள் :** | | |
| வங்கிக் கடன் | 16,000 | 32,000 |
| **நடைமுறைப் பரிப்புகள் :** | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 54,500 | 13,800 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புகளும்** | **145,000** | **103,000** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) **வரையறுக்கப்பட்ட ஹிரு கம்பனியானது** 2020 ஏப்ரல் 01 இல் **வரையறுக்கப்பட்ட தரு கம்பனியின்** சாதாரண பங்கு மூலதனத்தின் 80% இனைக் கொள்வனவு செய்தது. கொள்வனவுத் திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர்மதிப்பு ரூபா 20 மில்லியனாக இருந்தது. கொள்வனவுத் திகதியில், **வரையறுக்கப்பட்ட தரு கம்பனியின்** கைக்கொள் இலாபம் ரூபா 13 மில்லியனாக இருந்ததுடன் **வரையறுக்கப்பட்ட தரு கம்பனியின்** இனங்காணத்தக்க நிகரச் சொத்துகளின் சீர்மதிப்பு அதன் புத்தகப் பெறுமதிக்குச் சமனாக இருந்தது.

(2) 2018 ஏப்ரல் 01 இல் ரூபா 5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஒரு மோட்டார் வாகனத்தை, **வரையறுக்கப்பட்ட ஹிரு கம்பனியானது** 2020 ஏப்ரல் 01 இல் ரூபா 6 மில்லியனுக்கு **வரையறுக்கப்பட்ட தரு கம்பனிக்கு** விற்பனை செய்தது. இரு கம்பனிகளும் தமது மோட்டார் வாகனங்களை கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் 5 ஆண்டுகள் ஈறாக தேய்மானம் செய்கின்றன.

(3) 2021 மார்ச் மாத காலப்பகுதியில், **வரையறுக்கப்பட்ட தரு கம்பனியானது** ரூபா 10 மில்லியன் கிரயமான தொக்குகளை கிரயத்தில் 20% இலாப எல்லை வைத்து, **வரையறுக்கப்பட்ட ஹிரு கம்பனிக்கு** விற்பனை செய்தது. அதில், 50% தொக்குகள் 2021 மார்ச் 31 இல் **வரையறுக்கப் பட்ட ஹிரு கம்பனியின்** களஞ்சியத்தில் விற்பனை செய்யப்படாது மீதமாகியிருந்தது. மேலும், இந்தக் கொடுக்கல் வாங்கலின் முழுத் தொகையும் **வரையறுக்கப்பட்ட தரு கம்பனியின்** வியாபார வருமதிகளிலும் **வரையறுக்கப்பட்ட ஹிரு கம்பனியின்** வியாபார சென்மதிகளிலும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒன்றித்தலால் ஏற்படும் நன்மதிப்பை (goodwill) **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இலான ஒன்றித்த நிதி நிலைக் கூற்றைத் **தயாரிக்குக** (11 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |